பக்கங்கள் 17 + 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 17 சனிக்கிழமை 31.01.2026 | அதிர்வு 185

## திருகோணமலையில் இன்றும் நில அதிர்வு!



கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள ரொட்டவெவ மற்றும் கோமரங்கட வல ஆகிய பகுதியில் நில அதிர்வு ஏற்பட்டுள்ளது. 04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

### “மாவை” எனும் பெருந்தலைவர் தமிழ் மக்களின் உரிமைக்காக

# சிறைவாசம் கண்ட விடுதலைப் போராளி! சலுகைகளுக்கு விலைபோகாத உத்தமர்!!

### அவரின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்று வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

“முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சோ.சேனாதிராஜா பதவி ஆசையற்றவர், சலுகைகளுக்கு விலைபோகாத பெருந்தலைவர். தனக்கென எதனையும் எதிர்பார்க்காது, தமிழ் மக்களின் உரிமைக்காகப் பல ஆண்டுகள் சிறைவாசம் அனுபவித்த மிகச் சிறந்த தொரு மனிதரை நாம் இழந்திருக் கின்றோம்.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னாள் தலைவருமான காலஞ்சென்ற மாவை.சோ. சேனாதிராவின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, மாவிட்டபுரத்தில் அமைக் கப்பட்ட அன்னாரது திருவுருவச் சிலை வடக்கு மாகாண ஆளுநரால் 04▶

# பேரிடர் நிவாரணத்தில் மலையகத் தமிழருக்கு எதிராக இன ஒதுக்கல்!

## மனோ கணேசன் நேரடியாக முறையீடு இலங்கைக்கான ஐ.நா. பிரதிநிதியிடம்

“டித்வா பேரழிவுக்குப் பிந்தைய நிவாரணம் மற்றும் மீள்குடியேற்றத் திட்டங்களில், மலையகப் பெருந்தோட்ட சமூகத்தை, இன்றைய அரசாங்கம் ஒதுக்கி வைத்துள்ளது. இது திட்டமிட்ட இன ஒதுக்கல். எமது மக்கள் மீது பொறுப்பு ஐ.நா. சபைக்கு இருக்கின்றது. ஆகவே எங்கள் இந்த குற்றச்சாட்டை ஐ.நா. சபை விசேட கவனத்தில் எடுக்க வேண்டும்.”

- இவ்வாறு இலங்கையில் உள்ள ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஒருங்கிணைப்பாளர் மார்க் 04▶





# மாவையின் திருவுருவச் சிலை திறப்பு விழா

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மறைந்த பெருந்தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமா மாவை சேனாதிராஜாவின் திருவுருவச் சிலை திறப்பு விழா இன்று நடைபெற்றது.

இன்று காலை கே.கே.எஸ். வீதி மாவிட்டபுரத்தில், காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக இந்தத் திருவுருவச் சிலை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், தமிழ்நாட்டின் முன்னாள் அமைச்சர் ந.நல்லுசாமி, யாழ்.

தொடர்ச்சி▼



















# மாவையின் திருவுருவச் சிலை திறப்பு விழா

**தொடர்ச்சி▲**

இந்தியத் துணைத் தூதர் சாய் முரளி, நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவ ஞானம் சிறீதரன், ஞானமுத்து சிறிநேசன், கவீந்திரன் கோடீஸ்வரன், பத்மநாதன் சத்தியலிங்கம், கஜேந்திரகுமார் பொன் னம்பலம், யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு யஸ்ரின் பேணாட் ஞானப் பிரகாசம் ஆண்டகை, மறுவன் புலவு சச்சிதானந்தம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள், மாவை சேனாதிராஜாவின் குடும்பத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.




















## பேரிடர்...

(முதலாம் பக்கத் டிதொடர்ச்சி)

அந்ரே பிரான்சேவைச் சந்தித்து, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

"இலங்கை அரசாங்கத்தின், இடர் நிவாரண நிலையத்தின் மீள் கட்டுமான திட்டங்களின் கீழ், டித்வா பேரழிவில் பாதிப்புக்கு உள்ளான மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கு இடமில்லை. அவர்களை நாம் இந்திய வீடமைப்பு திட்டத்தின் கீழ்தான் வைத்துள்ளோம் என அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர்-நாயகம் பகிரங்கமாக இலங்கையின் ஒரு முன்னணி ஊடகத்துக்கு கூறியுள்ளார்.

இடர் நிவாரண நிலையத்தின் மீள் கட்டுமான, வீடமைப்பு திட்டத்தில், ஒவ்வொரு வீடும் அதிகபட்சமாக ரூபா. 50 இலட்சத்தில் வீடுகள் கட்டப்படும் உரிய காணிகள் இல்லாதோருக்கு காணிகள் வழங்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இந்தத் திட்டத்தை அனுராதபுரத்தில் ஆரம்பித்து வைக்கும் போது, அறிவித்தார். அதேவேளை இந்தத் திட்டத்தில், மலையக தமிழ் மக்களுக்கு இடமில்லை என ஜனாதிபதியால் விசேடமாக, அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகமாக நியமிக்க பட்டுள்ள பிரபாத் சந்திரகீர்த்தி கூறுகின்றார்.

மலையகத் தமிழர்கள் இந்நாட்டு குடிமக்கள் இல்லையா? அவர்கள் என்ன, இந்திய பிரஜைகளா? இலங்கையின் ஏனைய மக்களுக்கு, இடர் நிவாரண நிலையத்தின் மீள் கட்டுமானத்தில் வழங்கப்படும், உரிமைகள், கொடுப்பனவுகள் என்ற அரசாங்க கவனிப்புகள், ஏன் எமது மக்களுக்கு வழங்க படமுடியாது? ஆகவே இது எமது மக்களை மாற்றான் தாய் பிள்ளைகள் போன்று, இரண்டாம் தரப் பிரஜைகள் போன்று, நடத்தப்படும் இன ஒதுக்கல் இல்லையா? இதைக் கவனத்தில் எடுங்கள்." - என்றும் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஒருங்கிணைப்பாளரிடம் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில், ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஒருங்கிணைப்பாளர் மார்க் அந்ரே பிரான்சேக்கும், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுக்கும் இடையில் சந்திப்பு நடைபெற்றது. இதன்போது, ஜனநாயக மக்கள் முன்னணியின் சர்வதேச விவகாரங்களுக்குப் பொறுப்பான இணைத் தலைவரும் த.மு.கூ. அரசியல் குழு உறுப்பினருமான பாரத் அருள்சாமியும் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் மனோ கணேசன், தனது எக்ஸ் தளத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"இடம்பெயர்ந்த ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்பட வேண்டிய 50 இலட்சம் ரூபா வீடமைப்பு நிதியுதவியும், காணி ஒதுக்கீடும், பெருந்தோட்ட சமூகத்திற்கு மறுக்கப்பட்டு வருகின்றது. இது கவனயீனம் அல்ல. இது திட்டமிட்ட பாகுபாடு ஆகும். மலையக தமிழர்கள் மீது காட்டப்படும் இந்த "அபார்தெய்ட்" என்ற இன ஒதுக்கல் முடிவுக்கு வர வேண்டும்.

டித்வா பேரழிவுக்குப் பிந்தைய நிவாரணம் மற்றும் மீள்குடியேற்றத் திட்டங்களில் எங்கள் சமூகத்தை விலக்கி வைக்கும் நிலையை விளக்குவதற்காக ஐ.நா. வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அந்ரே பிரான்சேவிடம் நாம் தெரிவித்த எங்களது அவசர நிலைப்பாடுகள்:

✯ டித்வா பேரழிவால் இடம்பெயர்ந்த அனைத்து மலையகக் குடும்பங்களும், தேசிய பேரிடர் முகாமைத்துவ மையத்தின் கீழ் செயல்படும் ஜனாதிபதியின் ரூபா 50 இலட்ச வீடமைப்பு, மற்றும் காணி வழங்கல் திட்டத்தில் உள்வாங்க பட வேண்டும். பெருந்தோட்ட காணிகளின் உரிமையாளர் அரசாங்கமாகும். அங்கே பெருந்தோட்ட நிறுவனங்கள் நீண்டகால குத்தகைக்கே காணி நிலத்தை பயன்படுத்துகின்றன. ஆகவே பெருந்தோட்டங்களில் பாதுகாப்பான காணிகளை, அடையாளம் கண்டு, அவற்றை மலையக மக்களுக்கு பிரித்து கொடுக்க, அரசாங்கத்துக்கு சட்டப்படி அதிகாரம் உண்டு. காணிகளை தந்து, வீடமைத்து தந்து, பாதிக்க பட்ட மலையக மக்களுக்கும், நாட்டின் ஏனைய மக்களுக்கு சமானமான அந்தஸ்தை தரும் கடப்பாடு இலங்கை அரசாங்கத்துக்கு உண்டு. இதில் சட்ட தடைகள் எதுவும் இல்லை. அவசரச் சட்டங்கள் நிலம் கைப்பற்ற அனுமதிக்கின்றன. தோட்ட நிலங்கள் அரசின் நிலங்களே. நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் கீழ் நிரந்தரத் தீர்வுகள் உள்ளன.

✯ ரூபா 27 இலட்சம் பெறுமதியான, இந்திய அரசின் உதவி வீடமைப்பு திட்டம் தனியாகவே தொடர வேண்டும். இலங்கைப் பிரஜைகளான மலையகத் தமிழர்களுக்கான இலங்கை அரசின் பொறுப்புக்கு மாற்றாக, இந்திய அரசின் உதவி வீடமைப்பு திட்டம் அமைய முடியாது. டித்வா வீடமைப்பு திட்டம் என்பது, இலங்கை அரசின் இடர் நிவாரண விசேட அவசர திட்டமாகும். இந்திய அரசின் உதவி வீடமைப்பு திட்டம், பேரழிவு நிகழாத பிரதேசங்களில், வழமை போல், பெருந்தோட்ட தனி வீட்டு திட்டமாக தொடர வேண்டும். இலங்கையில் உள்ள இந்திய தூதரகமும் எமது நிலைப்பாட்டுக்கு சமானமான நிலைப்பாட்டை கொண்டுள்ளது.

✯ நில உரிமை, நிலத்துடன் கொண்டுள்ள சமூக பிணைப்பு, மற்றும் பாதுகாப்பு காரணங்களால், பெருந்தோட்டங்களில் தொடர்மாடி குடியிருப்புகளை கட்டி, நமது மக்களுக்கு வழங்கும் அரசாங்க யோசனையை நாம் ஒருபோதும் ஏற்று கொள்ள மாட்டோம்.

மலையக மக்களை ஒதுக்கி வைக்கும் கொள்கை "அபார்தைட்" என்ற இன ஒதுக்கல் ஆகும். தித்வா மீள்கட்டமைப்பு, பாதிக்க பட்ட இலங்கை மக்கள் அனைவரையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். அதற்காகவே உலக நாடுகள், மற்றும் இலங்கையின் உலகளாவிய அபிவிருத்தி பங்காளிகள், மற்றும் ஐ.நா. ஆகியவை இலங்கை அரசாங்கத்துக்கு உதவுகின்றன. ஆகவே இலங்கை அரசின் மலையக மக்களை ஒதுக்கி வைக்கும் இந்த கொள்கையை, ஐ.நா. தலையிட்டு உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்." - என்றுள்ளது.

## சிறைவாசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று சனிக்கிழமை காலை திரை நீக்கம் செய்து திறந்து வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் நடைபெற்ற நினைவுப் பேருரை மற்றும் மேடை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

"மாவை.சேனாதிராஜாவை எனக்கு எனது 10 வயதிலிருந்தே தெரியும். அவர் எனது தந்தையாரைச் சந்திப்பதற்காக அடிக்கடி எமது வீட்டுக்கு வருவார். நாங்கள் உயர்தரம் படித்துக் கொண் டிருந்த காலத்தில், எங்களைப் போன்ற இளையோருக்கு அரசியல் வகுப்புகளை நடாத்திய ஆசானாகவும் அவர் திகழ்ந்தார்.

நான் பிரதேச செயலாளராகவும், பின்னர் மாவட்ட செயலாளராகவும் பணியாற்றிய காலங்களில் அவர் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவி வகித்தார். அதிகாரத்தில் இருந்தாலும் அவர் மிகவும் எளிமையானவராகவே வாழ்ந்தார். அவரை எந்த நேரத்திலும், எவரும் இலகுவாகச் சந்திக்க முடியும் என்ற நிலை இருந்தது.

அவர் பதவி ஆசை இல்லாதவர். சலுகைகளுக்கு ஒருபோதும் விலைபோகாதவர். தனக்காகவோ, தன் குடும்பத்துக்காகவோ எந்தவொரு சலுகையையும் அவர் எதிர்பார்த்ததில்லை. இன்றைய அரசியல் சூழலில் அவர் மிக வித்தியாசமான ஒரு மனிதராகவே வாழ்ந்து மறைந்துள்ளார்.

அவர் ஒரு அப்பாவியான மனிதர். அவரிடம் உதவி கேட்டு வரும் யாருக்கும் 'மாட்டேன்' என்று சொல்லும் துணிவு அவருக்கு இருந்ததில்லை. அவரிடமிருந்து எப்போதும் எதிர்மறையான பதில்கள் வராது. அந்தளவுக்கு அவர் மென்மையான உள்ளம் கொண்டவர். தமிழ் மக்களின் உரிமைகளுக்காகத் தனது இளமைக் காலத்தைத் தியாகம் செய்து, பல வருடங்கள் சிறையில் வாடியவர். இத்தகையதொரு சிறந்த தலைவரை இழந்தமை எமது சமூகத்துக்குப் பேரிழப்பாகும்." - என்றார்.

மாவை.சோ.சேனாதிராஜாவின் முதலாம் ஆ ண்டு நினைவு மலரும், பேராசிரியர் பஞ்.இராமலிங்கம் எழுதிய ஈழ அண்ணல் மாவை.சோ.சேனாதிராஜா என்னும் நூலுமாக இரண்டு நூல்கள் இதன்போது வெளியிட்டு வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் தமிழக முன்னாள் அமைச்சர் ந.நல்லுசாமி, யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரகத்தின் கொன்சியூலர் ஜெனரல் சாய்முரளி, நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சித் தலைவர்கள், மதத் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், தமிழகம் மற்றும் புலம்பெயர் தேசங்களிலிருந்தும் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

## திருகோண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை நேரப்படி இன்று மாலை 3.45 மணிக்கும் 3.50 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் நில அதிர்வு இடம் பெற்றுள்ளது.இலங்கையில் திருகோணமலை, கண்டி உள்ளிட்ட பகுதிகளில் சிறு அளவிலான நில அதிர்வுகள் அவ்வப்போது பதிவாகி வருகின்றன.

Muhurtham Jewels

tamil one TV HD

SITPI ACADEMYயோடு இணைந்து
தமிழ் one tv வழங்கும்

# தமிழ் மரபுத் திங்கள்



**THEME :**

**தாய் நிலம், நமது மண், நமது வேர்**

**OUR LAND, OUR ROOTS**

*BLESSED PIER GIORGIO FRASSATI*
*8 SEASONS DRIVE*
*SCARBOROUGH, ON*

*SATURDAY*
*JAN 31 2026*
*10AM - 12.30 PM*

AERO COURIER Fast & Secure World Wide Service | VARNAM'S PETALS AND POOJA | JEGAN | NAM THAYAGAM நம் தாயகம் INC | முரசு

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தலையிடி தரும் குடைச்சல்

கடந்த அறுபது ஆண்டுகளாக இடதுசாரிகளாகத் தங்களை அடையாளப்படுத்திய தேசிய மக்கள் சக்தியின் பிரதான பங்காளிகளான ஜே.வி.பியினர், இதுவரை காலமும் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்து கொண்டு தொழிற்சங்கங்கள் ஊடாக ஆளும் தரப்புக்கு - அரசாங்கங்களுக்கு - தொடர்ந்து குடைச்சல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இப்போது ஆட்சி அதிகாரம் அவர்கள் கையில். சுமார் ஒரு வருடத்திற்கு மேல் கொண்டிழுத்து விட்டார்கள். ஆனால் தொழிற்சங்கக் குடைச்சல் இப்போது அவர்களுக்கு - அவர்களின் ஆட்சியதிகாரத்துக்கு - எதிராகத் திரும்பி இருக்கின்றது.

மருத்துவ சேவையிலிருந்து கல்வி சேவை, மின்விநியோகம் வரை பல துறைகளில் எந்தச் சமயத்திலும் தொழிற்சங்க நடவடிக்கைகள் மோசமாக வெடித்து நாட்டின் வழமையான நிர்வாகத்தை பெரும் பாதிப்புக்குள் ஆழ்த்தும் ஆபத்து நெருங்கி வருவது வெளிப்படையாகத் தெரிகிறது.

அண்மைய பேரிடர் காரணமாக - அந்த நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்காக - பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்ட அவசரகால நிலைமையை, இப்போது இந்தத் தொழிற்சங்கங்கள் கொடுக்கும் குடைச்சலை கையாண்டு சமாளிப்பதற்குப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் அரசுத் தலைவர் இருக்கின்றார்.

பல்வேறு பொதுச் சேவை துறைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி, அந்தச் சேவைகளில் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க அரசு முனைந்திருக்கின்றது.

பேரிடரை ஒட்டி அறிவிக்கப்பட்ட அத்தியாவசிய சேவைகள் இப்போது மீண்டும் வர்த்தமானி அறிவித்தல் மூலம் நீடிக்கப்பட்டிருக்கின்றன.

மின்சார விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகள், எரிபொருள், பெட்ரோலிய பொருள்கள், எரிவாயு விநியோகம் அல்லது பகிர்ந்தளிப்பு, வைத்தியசாலைகள், மருந்தகங்கள், பயணிகள் அல்லது சரக்கு போக்குவரத்து உள்ளிட்ட பல சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினால் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக, மருத்துவமனைகளுக்கு வருகை தரும் நோயாளர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அதன் தொடர் நடவடிக்கையாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிர்வாக சபை மீண்டும் கூடவுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக இன்று சங்கத்தின் விசேட நிறைவேற்றுச் சபைக் கூட்டம் நடைபெறுகின்றது.

அரச மருத்துவமனைகள் மற்றும் மருத்துவர்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வு வழங்குவதற்கு சுகாதார அமைச்சருக்கு வழங்கப்பட்ட 48 மணித்தியால கால அவகாசம், நேற்று நள்ளிரவு 12 மணியுடன் நிறைவுக்கு வந்த சூழலில் அரச மருத்துவர்களின் குடைச்சல் அரசுக்கு மேலும் தலையிடி தருவதாக அமையக் கூடும்.





# மாவடிப்பள்ளியில் ஏடு தொடக்க விழா

**(மாளிகைக்காடு செய்தியாளர்)**

மாவடிப்பள்ளி அல்-மதீனா பாலர் பாடசாலை மற்றும் மாவடிப்பள்ளி றோயல் பாலர் பாடசாலை மாணவர்களின் ஏடு தொடக்க விழா நேற்று மாவடிப்பள்ளி அமீரலி தோட்டத்தில் சிறப்பாக நடைபெற்றது.

சிறார்களின் கல்வி வாழ்க்கையின் முதல் படியை அடையாளப்படுத்தும் இந்த விழாவில், மாணவர்களுக்கு பாரம்பரிய முறையில் ஏடு துவக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் அல் மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் தவிசாளரும், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு முன்னாள் உறுப்பினருமான நூருல் ஹுதா உமர், மாவடிப் பள்ளி பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் நம்பிக்கையாளர் சபையின் தலைவர் எம்.ஐ.எம். மனாப் ஆகியோர் பிரதம அதிதியாக கலந்து கொண்டனர்.

உலமாக்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், பாடசாலை நிர்வாகத்தினர் மற்றும் சமூகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்கினர்.

இந்த நிகழ்வின் போது கல்வியின் முக்கியத்துவம், சிறுவயதிலேயே ஒழுக்கம், அறிவு மற்றும் நல்ல பண்புகளை வளர்த்தல் ஆகிய விடயங்கள் குறித்து உரையாற்றப்பட்டது. மேலும், சிறார்களின் எதிர்கால கல்விப் பயணம் சிறப்பாக அமைய வேண்டும் என்ற நல்வாழ்த்துக்களும் தெரிவிக்கப்பட்டன.

மாணவர்களும், பெற்றோரும் உற்சாகத்துடன் கலந்து கொண்ட இந்த விழா, சிறுவர்களின் கல்வி பயணத்திற்கு ஒரு சிறந்த தொடக்கமாக அமைந்ததுடன், மாணவர்களுக்கு இனிப்புக்களும் வழங்கி வரவேற்கப்பட்டனர்.












# ஜாஹீர் வெற்றிக்கிண்ணம் 2026; வெற்றிக்கிண்ண அறிமுக நிகழ்வு

**(மாளிகைக்காடு செய்தியாளர்)**

மாளிகா விளையாட்டுக்கழகம் நடத்தும் ஜாஹீர் வெற்றிக்கிண்ணம் 2026 இனை முன்னிட்டு, இந்த வருடத்திற்கான அதிகாரப்பூர்வ சீருடை அறிமுகம் மற்றும் வெற்றிக்கிண்ண அறிமுக நிகழ்வு நேற்று மாளிகைக்காடு பாபா றோயாளி மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

ஜாஹீர் பௌண்டஷன் தலைவர் அப்துல் மஜீத் ஜாஹீரின் அனுசரணையில் இடம்பெறவுள்ள இந்த சுற்றுப் போட்டி மாளிகா விளையாட்டுக்கழக 4 அணிகளை கொண்ட போட்டியாக அமையவுள்ளது.

மாளிகா விளையாட்டுக் கழக தலைவர் எஸ். பஸ்லூன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பொத்துவில் பிரதேச சபை தவிசாளருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் மற்றும் ஜாஹீர் வெற்றிக்கிண்ணம் 2026 இன் பிரதானியான காரைதீவு பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும், தற்போதைய உறுப்பினருமான ஏ.எம். ஜாஹீர் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், காரைதீவு பிரதேச சபை உப தவிசாளர் எம்.எச்.எம். இஸ்மாயில், காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் எம்.என்.எம். ரணீஸ் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், அல் மீஸான் பௌண்டஷன் தவிசாளர், ஊடகவியலாளர் நூருல் ஹுதா உமர் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

விளையாட்டு ஆர்வலர்கள், அணித் தலைவர்கள் மற்றும் வீரர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வு உற்சாகமான சூழலில் நடைபெற்றது. ஜாஹீர் வெற்றிக்கிண்ணம் 2026 போட்டித் தொடர், இளைஞர்களின் விளையாட்டு திறமைகளை வெளிக்கொணரவும், ஒற்றுமை மற்றும் நட்புறவை வலுப்படுத்தவும் முக்கியமான மேடையாக அமையும் என நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகள் தெரிவித்தனர்.

சீருடை மற்றும் வெற்றிக்கிண்ணம் அறிமுகம் செய்யப்பட்டதுடன், போட்டித் தொடரை வெற்றிகரமாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. மேலும் மாளிகா விளையாட்டுக்கழக வீரர்கள், நிர்வாகிகள் இதன்போது நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.
















# திருமலையில் அடை மழை

மிக நீண்ட நாள்களின் பின்பு திருகோணமலையில் இன்று அடை மழை பெய்தது.

தற்போது நெல் அறுவடை இடம் பெற்று வரும் நிலையில், கனமழை காரணமாக தடைப்பட்டுள்ளதுடன் மக்களின் இயல்பு நிலை பாதிப்படைந்துள்ளது.

திருகோணமலையின் கிண்ணியா, தம்பலகாமம், கந்தளாய் உள்ளிட்ட பல இடங்களிலும் மழை பெய்தது.

இதனால், அன்றாட ஜீவனோபாயம் பாதிக்கப்பட்டுள்ளது. சுமார் மூன்று மணித்தியாலங்கள் கடந்த நிலையில் அடை மழை பெய்தது.

தாழ் நிலப் பகுதிகள் நீரில் மூழ்கியுள்ளதுடன், நெற் செய்கை அறுவடை இயந்திரம் மூலமாக இடம் பெற்று வரும் நிலையில், அது தடைப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.



# ஐயன்கேணி வின்னிங் ஸ்டார் நடத்திய கௌரவிப்பு நிகழ்வு

(பழுவூரான்)

மட்டக்களப்பு ஐயன்கேணி வின்னிங் ஸ்டார் பாலர் பாடசாலை மற்றும் பாரதி சன சமூக நிலையம் ஆகியன இணைந்து நடத்திய கௌரவிப்பு நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை செங்கலடி புனித நிக்கொலஸ் தேவாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது அதிதிகள் வரவேற்பு, இறைவணக்கம், வரவேற்புரை, ஆசியுரை, தலைமயுரை, பாலர் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள், கௌரவிப்பு நிகழ்வு, அதிதிகள் உரை என்பன இடம்பெற்றன.நிகழ்வுகளில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் இ.சிறிநாத், ஏறாவூர்ப்பற்றுப் பிரதேச சபை உப தவிசாளர் எஸ்.சர்வானந்தன், ஏறாவூர்ப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினர்களான த.பிரபாகரன், சி.நாகேந்திரன், செ.நிலாந்தன், த.டிலக்சினி, மதத் தலைவர்கள், சமூக ஆர்வலர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.







# பூண்டுலோயாவில் நிறுவப்படவுள்ள இருபெரும் துறவிகளின் சிலைகள்

(வி.ரி.சகாதேவராஜா )

உலகளாவிய இராமகிருஷ்ண மிஷனை ஸ்தாபித்த வீரத்துறவி சுவாமி விவேகானந்தர் மற்றும் உலகின் முதல் தமிழ் பேராசிரியர், முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் ஆகியோரின் திருவுருவச்சிலைகள் அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியத்தின் (ஒஸ்கார்) ஏற்பாட்டில் பூண்டுலோயாவில் எதிர்வரும் பெப்ரவரி 07 ஆம் திகதி நிறுவப்படும் என ஒஸ்கார் தலைவர் கந்தசாமி பத்மநாதன் தெரிவித்தார்.

இந்த சிலைகள் மத்திய மலையகத்தில் நுவரேலியா மாவட்டத்தில் கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவில் பூண்டுலோயா விவேகானந்த மகாவித்தியாலயத்தில், அதிபர் ஆறுமுகம் ரவீந்திரன் தலைமையில் திறந்து வைக்கப்படவுள்ளது.





இராமகிருஷ்ண மிஷனின் இலங்கைக்கான தலைவர் ஸ்ரீமத் சுவாமி அக்ஷராத்மானந்த ஜீ மஹராஜ் மற்றும் மட்டக்களப்பு மாநில பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மஹராஜ் ஆகியோர் சிலைகளை திறந்து வைக்கப்படவுள்ளனர்.

ஒஸ்கார் சார்பில் தாயக இணைப்பாளர் ஓய்வு நிலை உதவி கல்விப் பணிப்பாளர் வித்தகர் விபுலமாமணி வி.ரி. சகாதேவராஜா கௌரவ அதிதியாக கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

நிகழ்வில் கலந்து கொள்வோருக்கு அன்னதானம் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது..

இவ் விழாவிற்காக வடக்கு கிழக்கில் இருந்தும் இராமகிருஷ்ண மிஷன் அபிமானிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.








# சாய்ந்தமருதில் இடம்பெற்ற தீவிர சுகாதார பரிசோதனை

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதனின் வழிகாட்டலில், இன்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தீவிர சுகாதார பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன் ஒரு பகுதியாக, சாய்ந்தமருது பிரிவுக்குட்பட்ட சில்லறை விற்பனை நிலையங்கள் விரிவான சுகாதார பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.

பொதுமக்களின் சுகாதார பாதுகாப்பை உறுதி செய்வதுடன், உணவு பாதுகாப்பு விதிமுறைகள் முறையாக பின்பற்றப்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த பரிசோதனைகளில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் நுளம்பு களத்தடுப்பு உதவியாளர்கள் இணைந்து பங்கேற்றனர் .

விற்பனை நிலையங்களின் சுத்தம், உணவுப் பொருள்களின் தரம், காலாவதி நிலை உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை ஆய்வு செய்தனர்.

சுகாதார விதிமுறைகளை மீறிய சில நிலையங்களுக்கு தேவையான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டதுடன், எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர்.

மேலும், இதே நாளில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மாவடி வீதியில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் நுளம்பு களத்தடுப்பு உதவியாளர்களின் பங்கேற்புடன் நுளம்பு களத்தடுப்பு பரிசோதனை நடவடிக்கையும் இடம்பெற்றது.

இதன் போது நுளம்பு பெருக்கம் ஏற்படக்கூடிய இடங்கள் அடையாளம் காணப்பட்டு, அவற்றை அகற்றுவதற்கான அறிவுறுத்தல்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டன.

இத்தகைய சுகாதார மற்றும் நுளம்பு களத்தடுப்பு பரிசோதனைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என சுகாதார வைத்திய அதிகாரி ஜே. மதன் தெரிவித்தார்.











# எல்ல கோட்டக் கல்வி பணிமனையின் திறந்துவைக்கப்பட்ட புதிய கட்டடம்

(பசறை நிருபர் )

பண்டாரவளை வலயத்திற்குட்பட்ட எல்ல கோட்டக் கல்வி பணிமனையின் புதிய கட்டட திறப்பு விழா இன்று நடைபெற்றது.

இதன்போது எல்ல கோட்டக் கல்வி அலுவலகத்தின் புதிய இணைய வலைத் தளம் உத்தியோகப்பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஊவா மாகாண ஆளுநர் கபில ஜெயசேகர, சுற்றுலாத் துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க, ஊவா மாகாண கல்விச் செயலாளர், பண்டாரவளை வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



















# அருண்ஹேமச்சந்திர தலைமையில் இடம்பெற்ற திருகோணமலை ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

**(ஹஸ்பர் ஏ.எச்)**

திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இன்று மாவட்ட செயலக பிரதான மண்டபத்தில் இடம் பெற்றது.

திருகோணமலை மாவட்ட செயலாளர் பிள்யு.ஜீ.எம்.ஹேமந்தகுமாரவின் ஏற்பாட்டிலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவரும் வெளிவிவகாரம் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பிரதியமைச்சருமான அருண் ஹேமச்சந்திர தலைமையில் இடம் பெற்ற இந்த கூட்டத்தை போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் நிரோஷன் ரத்நாயக்க நெறிப்படுத்தியிருந்தார்.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சண்முகம் குகதாசன், இம்ரான் மஹ்ரூப், ரொசான் அக்மீமன மற்றும் மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், உள்ளூராட்சி மன்ற தலைவர்கள், திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், முப்படைகளின் உயரதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது வீதி அபிவிருத்தி, கிராமிய வீதிகள்,பாலங்கல் தொடர்பிலான முன்வைக்கப்பட்ட யோசனைகள் மற்றும் கடந்த ஆண்டிற்கான முன்னேற்ற மதிப்பீட்டு மீளாய்வு நடவடிக்கைகளும் ஆராயப்பட்டன.

குளங்கள் அபிவிருத்தி, புகையிரத சேவை விரிவாக்கம் மற்றும் கழிவு முகாமைத்துவம், வனஜீவராசிகள் ஊடாக யானை வேலி அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பிலும் மக்களுக்கான எதிர்கால திட்டங்கள் தொடர்பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டன.

அனர்த்த காலங்களின் போதான பாதிக்கப்பட்ட கரையோர மற்றும் வீதி புனரமைப்பு தொடர்பிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி, நகர அபிவிருத்தி தொடர்பிலும் பேசப்பட்டன.

மேலும் திருகோணமலை மாவட்ட குச்சவெளி பகுதியில் சுற்றுலா அபிவிருத்தி தொடர்பிலும் பொது போக்குவரத்து வசதிகள் விரிவாக்கம் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.















# மல்வத்தை வித்தியாரம்ப விழாவில் ஒஸ்காரின் கற்றல் உபகரணம் வழங்கல்

**(வி.ரி. சகாதேவராஜா)**

சம்மாந்துறை வலயத்துக்குட்பட்ட மல்வத்தை சீர்பாததேவி வித்தியாலய முதலாம் தர மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழாவில் அவுஸ்திரேலியா காரைதீவு மக்கள் ஒன்றியத்தினர் (ஒஸ்கார்) ஒரு தொகுதி கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர்.

பாடசாலை அதிபர் ஏ.சதானந்தா தலைமையில் நடைபெற்ற வித்தியாரம்ப விழாவில், அவுஸ்திரேலியா காரைதீவு ஒன்றிய (ஒஸ்கார்) அமைப்பின் தலைவர் கந்தசாமி பத்மநாதன் தலைமைத்துவத்தில், பொருளாளர் வீ.விவேகானந்த மூர்த்தியின் ஒருங்கிணைப்பில், வைத்திய கலாநிதி மருத்துவர் விவே.நுரோஜன் சுஜீவனி தம்பதியர் கற்றல் உபகரணங்களை வழங்க அனுசரணை வழங்கியிருந்தனர்.

இந்த விழாவில் பிரதம அதிதியாக, ஒஸ்கார் இலங்கைப் பிரதிநிதியும் ஓய்வு நிலை உதவி கல்விப் பணிப்பாளருமான வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.








# இந்த தேர்தலில் வெற்றி பெறுவேன்: த.வெ.கவின் தலைவர் விஜய் உறுதி



"இந்தத் தேர்தலில் நான் வெற்றி பெறப் போவது உறுதி எனும்போது, 'நான் ஏன் கிங்மேக்கராக' இருக்கப் போகிறேன்."

– இவ்வாறு த.வெ.க. தலைவர் விஜய் கூறியுள்ளார்.

விஜய் அரசியல் கட்சி ஆரம்பித்த பின்னர் முதன்முறையாக ஆங்கில ஊடகம் ஒன்றுக்குப் பேட்டியளித்துள்ளார்.

சென்னையில் அவரைச் சந்தித்த அந்த ஊடகக் குழுவினரிடம் விஜய் தெரிவிக்கையில்,

"கரூர்சம்பம்எனக்குஅதிர்ச்சியைத்தந்தது. இன்றளவும் என்னை அந்த நிகழ்வு பாதிக்கிறது, இப்படியொரு நிகழ்வு நடக்கும் என்று நான் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

நான் என்ன செய்ய வேண்டும் என நினைக்கிறேனோ அதில் நான் உறுதியாக இருப்பேன். எனது இலக்குகள் பற்றி அறியாமல் நான் எதையும் செய்வதில்லை. அந்தவகையில், அரசியல் தான் எனது எதிர்காலம் என்று நான் முடிவு செய்துவிட்டேன்.

'ஜனநாயகன்' படத்தின் வெளியீட்டுக்குச் சிக்கல் வரும் என்று நான் முன்கூட்டியே கணித்திருந்தேன். எனது படம் அரசியல் காரணங்களுக்காக நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இதற்கு நான் மனதளவில் தயாராகியிருந்தேன். ஆனால், படம் தள்ளிப்போவதால் தயாரிப்பாளருக்கு ஏற்பட்ட நெருக்கடிக்காக நான் வருந்துகிறேன்.

அரசியலில் நான் கிங்மேக்கராக முத்திரை குத்தப்பட விரும்பவில்லை. நான் இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவேன் என்ற சூழல் இருக்கும்போது நான் 'ஏன் கிங்மேக்கராக' இருக்கப் போகிறேன். எனக்குச் சேரும் கூட்டத்தை நீங்கள் கவனித்திருக்கிறீர்கள் தானே.

நான் பல ஆண்டுகளாக சினிமாவில் நடித்துள்ளேன். இனி அரசியல் செய்வது என்று தீர்மானித்துதான் வந்துள்ளேன். இந்த மாற்றம் அத்தனை எளிதாக நடந்துவிடவில்லை. அரசியலில் எனது 'ரோல் மாடல்' எம்.ஜி.ஆர், ஜெயலலிதா தான்." என்று கூறியுள்ளார்.

மேலும், விஜய் தான் ஷாருக்கானின் தீவிர ரசிகர் என்றும் கூறியுள்ளார்.

த.வெ.கவுக்கு அண்மையில் தேர்தல் ஆணையம் விசில் சின்னத்தை ஒதுக்கியது. பொதுச் சின்னம் கிடைத்ததை த.வெ.க. தலைவர் விஜய், முதல் வெற்றி என்று சிலாகித்துப் பதிவிட்டிருந்தமை நினைவுகூரத்தக்கது.

# இந்திய மீனவர்கள் மீதும் இரக்கம் காட்ட வேண்டும்

## மோடியிடம் இந்திய மீனவர் காங்கிரஸ் வலியுறுத்தல்



பிரதமர் மோடி பங்களாதேஷ் மீனவர்கள் மீது காட்டும் இரக்கத்தை இந்திய மீனவர்களின் மீதும் காட்ட வேண்டும் என்று அகில இந்திய மீனவர் காங்கிரஸ் தலைவர் ஆம்ஸ்ட்ராங் பெர்னாண்டோ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக, அவர் வெளியிட்ட அறிக்கை,

"இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் தொடர்ந்து கைது செய்யப்பட்டு, அவர்களின் மீன் பிடி படகுகள் பறிமுதல் செய்யப்பட்டு, சிறையில் அடைத்து கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அத்துடன், 1 கோடி இந்திய ரூபா வரை அபராதமும் விதிக்கப்படுகிறது.

இதை தடுக்கவும், மீனவர்களை மீட்கவும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல், அலட்சிய போக்கை கடைபிடித்து வரும் பிரதமர் மோடி அரசு, இந்திய எல்லை தாண்டி மீன் பிடித்த பங்களாதேஷ் மீனவர்கள் 128 பேரை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்வதாக அறிவித்துள்ளது. கடந்த ஆண்டில் மட்டும் 135 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டு, 41 விசை படகுகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு தொடங்கியது முதலே இலங்கை கடற்படை இதுவரை 16 இந்திய மீனவர்களை கைது செய்தும், 4 விசைப் படகுகளை கைப்பற்றியும் அராஜகம் செய்துள்ளது. தொடர்ந்து அலட்சியமாக செயல்பட்டு வரும் மத்திய வெளியுறவுத் துறையும், அதன் வெளியுறவுக் கொள்கையும் தோல்வியடைந்துள்ளது.

காங்கிரஸ் கட்சி மத்தியில் ஆட்சியில் இருந்த போது மீட்பு நடவடிக்கைகள் மிகவும் துரிதமாக எடுக்கப்பட்டன. பிரதமர் மோடி பங்களாதேஷ் மீனவர்கள் மீது காட்டும் இரக்கத்தை நம் இந்திய மீனவர்களின் மீதும் காட்ட வேண்டும்.

இனிமேல் இந்திய மீனவர் ஒருவர் கூட இலங்கை கடற்படையால் கைது செய்யப்படாத வண்ணம் கடுமையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# தி.மு.க. கூட்டணியில் தடுமாற்றம்: அ.தி.மு.க பொதுச் செயலாளர் கருத்து



தி.மு.க. கூட்டணியில் தடுமாற்றம் ஏற்பட்டுள்ளதாக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க சார்பில் முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரின் 109 பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம், சென்னை கே.கே நகரில் நேற்று நடைபெற்றது.

இதில் கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி உரையாற்றுகையில்,

"நாட்டில் எத்தனையோ தலைவர்கள் இருந்தாலும் மக்களுக்காக வாழ்ந்த ஒரே தலைவர் எம்.ஜி.ஆர். எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் வரலாறு படைத்த தலைவர்கள். இந்த பூமி உள்ளவரை அவரது புகழ் நிலைத்து நிற்கும்.

தி.மு.க. ஆட்சிக்கு வந்து 5 ஆண்டுகள் நிறைவு பெற இருக்கிறது. அடுத்த மாதம் தேர்தல் அறிவித்து விடுவார்கள். ஏப்ரல் முதல் வாரத்தில் தேர்தல் நடக்கும். தி.மு.க. ஆட்சிக்கு இன்னும் 2 மாதங்கள், 2 அமாவாசைகள் தான் இருக்கிறது. இந்நிலையில் புதிய புதிய திட்டங்களை அறிவிக்கிறார்கள், அடிக்கல் நாட்டுகிறார்கள். ஒரு மாதத்தில் திட்டங்களை நிறைவேற்ற முடியுமா?

அ.தி.மு.க. பலமான கூட்டணி: காங்கிரஸ் – தி.மு.க. கூட்டணியில் குழப்பமும், விரிசலும் வந்தாகிவிட்டது. உதயநிதி, காங்கிரஸ் கை கொடுக்கும் என்றார். ஆனால் கை நழுவும் நிலையில் உள்ளது.

தி.மு.க. கூட்டணியில்தடுமாற்றம் ஏற்பட்டுள்ளது. அ.தி.மு.க. பலம் வாய்ந்த கூட்டணியை அமைத்துள்ளது. அ.தி.மு.க. கூட்டணியில் பல கட்சிகள் வந்துள்ளன. இன்னும் சில கட்சிகள் வர உள்ளன.

தி.மு.க. ஆட்சியை எப்போது வீட்டுக்கு அனுப்புவது என மக்கள் தேர்தலை எதிர்நோக்கி காத்திருக்கின்றனர். இந்த தேர்தலில் நமது கூட்டணி 210 இடங்களில் வெல்லும். அதிமுக தனி பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்.

தி.மு.க. அரசில் ஸ்டாலின், உதயநிதி, சபரீசன், துர்கா ஸ்டாலின் என 4 முதல்வர்கள் தமிழகத்தை ஆட்டிப் படைக்கின்றனர். தமிழகத்தை 4 அதிகார மையங்கள் ஆண்டு கொண்டிருக்கின்றன.

தி.மு.கவினர் கடந்த 5 ஆண்டுகளில் 4 லட்சம் கோடி இந்திய ரூபா வரை கொள்ளை அடித்துள்ளனர். தேர்தலின் போது பல தி.மு.க. அமைச்சர்கள் பத்திரமாக இருக்க வேண்டிய இடத்தில் இருப்பார்கள்.

தமிழகத்தில் பதற்றமான சூழல் உருவாகியுள்ளது. 699 சிறுமிகள் பாலியல் குற்றங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் இதைவிட மோசமான ஆட்சி இதுவரை நடந்ததில்லை." என்று தெரிவித்துள்ளார்.

# உலகப்புகழ் பெற்ற மூத்த நடிகை கேத்தரின் ஓஹாரா காலமானார்



எம்மி விருது வென்ற உலகப்புகழ் பெற்ற மூத்த நடிகை கேத்தரின் ஓ'ஹாரா தனது 71 ஆவது வயதில் நேற்று லொஸ் ஏஞ்சல்ஸில் காலமானார்.

அவரது மறைவுச் செய்தி வெளியானதிலிருந்து, மரணத்திற்கான காரணம் குறித்த விவாதங்கள் சமூக வலைதளங்களில் தீவிரம் அடைந்துள்ளன.

இது குறித்துப் பேசிய அவரது ஊடகப் பிரதிநிதிகள், குறுகிய கால உடல்நலக் குறைவு காரணமாகவே அவர் உயிரிழந்தார் எனத் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், அவருக்கு என்ன நோய் இருந்தது என்பது குறித்த மேலதிக விபரங்களை வெளியிட அவர்கள் மறுத்துவிட்டனர் என வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## அமெரிக்காவில் வேலைவாய்ப்பு:

# 65,000 மேலதிக விசாக்களை வழங்குகிறது ட்ரம்ப் நிர்வாகம்






அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பின் நிர்வாகம், எதிர்வரும் செப்டம்பர் 30 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் மேலதிகமாக 65,000 ‘H-2B’ பருவகால பணியாளர் விசாவழங்கல்களை அதிகரிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள தொழிலாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில், பருவகால பணிகளுக்காக வழங்கப்படும் ‘H-2B’ விசாக்களின் எண்ணிக்கையை 65,000 இனால் அதிகரிக்க ட்ரம்ப் நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

கட்டுமானம், விருந்தோம்பல் , நில அலங்காரம் மற்றும் கடல் உணவு பதப்படுத்துதல் போன்ற துறைகளில் போதிய அமெரிக்க பணியாளர்கள் கிடைக்காததால், பல நிறுவனங்கள் கடும் நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளன.

இதனைத் தவிர்ப்பதற்காகவே இந்த மேலதிக விசாக்கள் வழங்கப்படவுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன. ஆண்டுதோறும் வழங்கப்படும் 66,000 விசாக்களுடன், தற்போது இந்த 65,000 விசாக்களும் சேர்க்கப்படுவதால் மொத்த எண்ணிக்கை கிட்டத்தட்ட இருமடங்காக உயர்ந்துள்ளது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வெளியிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2025 இல் மீண்டும் வெள்ளை மாளிகைக்குத் திரும்பிய ஜனாதிபதி ட்ரம்ப், சட்டவிரோதகுடியேற்றவாசிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகளை எடுத்தும் நிலையிலும், வர்த்தக நிறுவனங்களின் கோரிக்கையை ஏற்று இந்த விசா உயர்வை வழங்கியுள்ளார்.

அதேவேளை, தொழில்நுட்பத் துறையினருக்கான ‘H-1B’ விசாக்களுக்கு 100,000 டொலர் கட்டணத்தை விதித்து, அத்துறையில் கட்டுப்பாடுகளை இறுக்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சுரங்கம் இடிந்து வீழ்ந்ததில் 200 இற்கு மேற்பட்டோர் பலி




மத்திய ஆபிரிக்காவில் அமைந்துள்ள, காங்கோ ஜனநாயகக் குடியரசின் கிழக்குப் பகுதியில் ருபாயா கொல்டன் சுரங்கத்தில் ஏற்பட்ட சரிவில் சிக்கி 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கோமா நகரிலிருந்து வடமேற்கே சுமார் 60 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்தச் சுரங்கம் கடந்த புதன்கிழமை சரிந்தது.

வெள்ளிக்கிழமை மாலை வரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை துல்லியமான தெளிவாகத் தெரியவில்லை என ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

இந்த நிலச்சரிவில் சுரங்கத் தொழிலாளர்கள், குழந்தைகள் மற்றும் சந்தைப் பெண்கள் உட்பட 200 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்த 20 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல எண்ணிக்கை இன்னும் அதிகமாக வாய்ப்பு இருப்பதாக ரொய்ட்டர்ஸ் தெரிவித்துள்ளது.

கனடா முரசு
சனிக்கிழமை 31/01/2026

## பிராம்ப்டனில் வாகன விபத்து

**பெண் உயிரிழப்பு**

கனடாவின் பிராம்ப்டன் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் 29 வயதான பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

03▶



# கனடா விமானங்களுக்கு 50 வீத வரி விதிக்கப்படும்

## அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரிக்கை

**சீனாவுடன் வர்த்தகம் செய்ய கனடா ஒப்பந்தம் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளார் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப். இந்த ஒப்பந்தப்படி கனடா வர்த்தகத்தில் ஈடுபட்டால், கனடா பொருள்களுக்கு 100 சதவீத வரி விதிக்கப்படும் என எச்சரித்தார்.**

**இந்நிலையில், அமெரிக்காவின் கல்ப்ஸ்ட்ரீம் ஏரோஸ்பேஸ் நிறுவன விமானங்களுக்கு, கனடா அங்கீகாரம் வழங்கவில்லை என்றால், அமெரிக்காவில் விற்பனை செய்யப்படும் கனடா தயாரிப்பு விமானங்களுக்கு 50 சதவீத வரி விதிக்கப்படும் என ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

மேலும், "கனடாவில் தயாரிக்கப்படும் அனைத்து விமானங்களுக்கான அங்கீகாரத்தை ரத்து செய்வேன் . பம்பார்டியர் நிறுவனத்தின் 150 குளோபல் எக்ஸ்பிரஸ் விமானங்கள் அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்டு இயங்குகின்றன. இவற்றின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும்" என கூறியுள்ளார்.

அமெரிக்காவின் கல்ப்ஸ்ட்ரீம் ஏரோஸ்பேஸ் நிறுவனம், கனடாவின் பம்பார்டியர் விமான நிறுவனத்துக்கு போட்டியாக உள்ளது. இதனால் கல்ப்ஸ்ட்ரீம் நிறுவன விமானங்களுக்கு கனடா அங்கீகாரம் அளிக்காமல் உள்ளது.



# கனேடிய தயாரிப்புகள் என பொய் கூறி கனேடியர்களை ஏமாற்றும் நிறுவனங்கள்

அமெரிக்க தயாரிப்புகளை நிராகரிப்பதன்மூலம் தங்கள் நாட்டுப்பற்றைக் காட்ட விரும்புகிறார்கள் கனேடியர்கள்.

ஆனால், அவர்கள் உள்நாட்டு தயாரிப்புகள் என நம்பி வாங்கும் பொருள்கள் எல்லாம் உண்மையாகவே கனேடிய தயாரிப்புகளா?

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக இணைக்கப்போவதாக மிரட்டியதும், கனடா மீது கூடுதல் வரிகள் விதித்ததும் கனேடியர்கள் பலருக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஆகவே, அமெரிக்காவைப் புறக்கணிக்கும் பல்வேறு விடயங்களைச் செய்து, அதன் மூலம் ட்ரம்புக்கு சவால் விட நினைக்கிறார்கள் கனேடியர்கள்.

அவ்வகையில், அமெரிக்கத் தயாரிப்புகளை புறக்கணிப்பதன் மூலம், வேறு வகையில் கூறினால், உள்நாட்டு தயாரிப்புகளை வாங்குவதன் மூலம் தங்கள் நாட்டுப்பற்றை காட்ட விரும்புகிறார்கள் பலர்.

விடயம் என்னவென்றால், உள்நாட்டு தயாரிப்புகள் என மக்கள் கருதும் பல தயாரிப்புகள் உண்மையில் அமெரிக்க தயாரிப்புகள் என தெரியவந்துள்ளது.

குறிப்பாக, Betty Crocker's chocolate chip cookie mix என்னும் தயாரிப்பில், 'Canada's #1 Selling Baking Mix Brand' என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேபோல, Habitant pea soup என்னும் உணவின் டின் மீது 'Designed in Canada' என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், McCain Super Spirals french fries என்னும் உணவுப்பொருளின் லோகோவில், maple இலையின் படமும், 'Proud Canadian Company' என்னும் சொற்களும் இடம்பெற்றுள்ளன.

விடயம் என்னவென்றால், இந்த தயாரிப்புகளை திருப்பி பின்பக்கம் பார்த்தால், அவற்றில், 'Product of USA', அதாவது, முன்பக்கம் பார்த்தால் கனேடிய தயாரிப்புகள் போல் தோன்றும் இந்த உணவுபொருள்களின் கவர் அல்லது டின்களின் பின்பக்கத்திலோ, அமெரிக்க தயாரிப்பு என குறிப்பிடப்பட்டுள்ளது.




இந்த நிறுவனங்கள் செய்யும் இந்த விடயம், தங்களை ஏமாற்றுவது போல் உள்ளதாக வருத்தம் தெரிவிக்கிறார்கள் உண்மை தெரிந்தவர்கள்.

ஆனால், Product of Canada, Designed in Canada என ஒவ்வொரு விடயத்துக்கும் ஒவ்வொரு அர்த்தம் இருக்கிறதாம்.

ஆக, கனேடிய தயாரிப்புகளை மட்டும் வாங்க விரும்பும் கனேடியர்கள், தாங்கள் வாங்கும் பொருள் மீது Product of Canada' என குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை கவனித்து வாங்குமாறு ஆலோசனை கொடுக்கப்பட்டுள்ளது.

# 80 மில்லியன் டொலர் பரிசு வென்ற அதிர்ஷ்டசாலி உரிமை கோரவில்லை



கனடாவின் ஒன்டாரியோ மாகாணம் லண்டன் நகரில் விற்கப்பட்ட வெற்றி லொத்தர் சீட்டுக்கான 80 மில்லியன் டொலர் பரிசு, விற்பனை செய்யப்பட்டு ஒரு மாதம் கடந்தும் இதுவரை யாராலும் கோரப்படவில்லை.

இது கனடா லொத்தர் சீட்டு வரலாற்றிலேயே மிகப்பெரிய பரிசுகளில் ஒன்றாகும்.

நாங்கள் இன்னும் காத்திருக்கிறோம். வெற்றியாளர் ஒருவர் தானா அல்லது குழுவா என்பது கூட தெரியவில்லை, ஏனெனில் இதுவரை எவரும் எங்களை தொடர்புகொள்ளவில்லை என ஒன்றாரியோ லொத்தர் சீட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

வெற்றியாளர்கள் பொதுவாக நிதி ஆலோசகர்கள், வழக்கறிஞர்கள், வங்கியாளர்கள் மற்றும் குடும்பத்தினருடன் ஆலோசனை நடத்த சில மாதங்கள் எடுத்துக்கொள்வார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பல ஆண்டுகளாக லண்டன் நகரில் பெரிய லொத்தர் வெற்றிகள் பதிவாகியுள்ளன. அண்மைய நாள்களில் 11 மில்லியன் மற்றும் 9 மில்லியன் டொலர் பரிசுகளும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

2019ஆம் ஆண்டு சென் தோமஸ் பகுதியைச் சேர்ந்த தம்பதியர் 26 மில்லியன் டொலர் வென்றபோதும் ஆலோசனை பெற்ற பின்னரே பரிசினை பெற்றுக்கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஒற்றை பயன்பாட்டு பிளாஸ்டிக் தடை தொடர கனடா அரசுக்கு அதிகாரம் வழங்கிய நீதிமன்றம்

ஒற்றை பயன்பாட்டு பிளாஸ்டிக் பொருள்களுக்கு விதிக்கப்பட்ட தடையை தொடர கனடா அரசுக்கு அதிகாரம் வழங்கி மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

முன்னதாக, பிளாஸ்டிக் பயன்பாட்டை ரத்து செய்யும் மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கை சட்டவிரோதமானது என கூறி நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

2023ஆம் ஆண்டு நீதிமன்றம், "பிளாஸ்டிக் தயாரிப்பு பொருட்கள் அனைத்தையும்" நச்சுப் பொருள்களாக வகைப்படுத்தியதில் அரசு தனது அதிகார எல்லையை மீறியதாக தீர்ப்பளித்திருந்தது.

எனினும் இந்த தீர்ப்பினை மத்திய அரசாங்கத்தின் மேன்முறையீட்டு நீதிமன்றம் தற்பொழுது ரத்து செய்துள்ளது.

எனினும் மூன்று நீதிபதிகள் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற குழு, பிளாஸ்டிக் தயாரிப்பு பொருள்களை நச்சுப் பொருள்களாக பட்டியலிட்ட அரசின் முடிவு நியாயமானது என தெரிவித்தது.

இந்த வகைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, ஸ்ட்ரா, மளிகைப் பைகள், கலக்குக் குச்சிகள் மற்றும் பானக் கான்களை ஒன்றாகப் பிடிக்க பயன்படும் 'சிக்ஸ்-பேக்' வளையங்கள் உள்ளிட்ட ஆறு வகையான ஒற்றை பயன்பாட்டு பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி மற்றும் இறக்குமதியை அரசு தடை செய்துள்ளது.

இந்த பொருள்கள் அதிக அளவில் குப்பையாகக் காணப்படுவதோடு, அவற்றிற்கு மாற்று தீர்வுகளும் எளிதில் கிடைப்பதால் அவை தேர்வு செய்யப்பட்டதாக அரசு விளக்கியது.




மேலும், பிளாஸ்டிக்குகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் அபாயங்களை ஆய்வு செய்ய தனி மதிப்பாய்வு குழுவை அமைக்காத அரசின் முடிவும் நியாயமானதே என மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பிராம்ப்டனில்.

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த விபத்து மாலை 6 மணியளவில் குயின் மேற்கு வீதி மற்றும் மெக்லாகின் வீதியில் ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி பெண் வீதியை கடந்து கொண்டிருந்த போது வாகனம் மோதியதாக தெரிவிக்கப்படுகின்றது.

மிகவும் ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட அந்த பெண் பின்னர் உயிரிழந்ததார் என அவர் கூறினார்.

இந்த விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

குறிப்பாக, வாகன ஓட்டுநர் விபத்தில் ஈடுபட்டதை உணர்ந்தாரா என்பது பற்றியும் விசாரிக்கப்படுகிறது என பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸார் வாகனத்தை நிறுத்திய பின்னர் ஓட்டுநர் அங்கிருந்தே ஒத்துழைத்துள்ளார் என கூறப்பட்டுள்ளது.

இந்த விபத்தைக் கண்டவர்கள் அல்லது தொடர்புடைய தகவல்கள் உள்ளவர்கள் பொலிஸாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளது.







